www.Padasalai.Net www.TrbTnpsc.com

VNR10SS

விருதுநகர் மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2023

வகுப்பு - 10

சமூக அறிவியல்

கால அளவு: 3.00 மணி நேரம் மொத்த மதிப்பெண்கள்: 100

பகுதி - I

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 14×1=14

1. இத்தாலி யாருடன் லேட்டரன் உடன்படிக்கையைச் செய்து கொண்டது?
   அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா இ) போப் ஈ) ஸ்பெயின்
2. அமெரிக்கா தனது முதல் அணுகுண்டை எங்கே வீசியது?
   அ) கவாசாகி ஆ) இன்னோசிமா இ) ஹிரோஷிமா ஈ) நாகசாகி
3. எந்த ஆண்டில் உடன்கட்டை ஏறுதல் (சதி) ஒழிக்கப்பட்டது
   அ) 1827 ஆ) 1829 இ) 1826 ஈ) 1927
4. அமிர்தசரஸ் ரௌலட்சட்ட எதிர்ப்புப் போராட்டங்களின் போது கைது செய்யப்பட்டவர் யார்?
   அ) மோதிலால் நேரு ஆ) சைஃபுதின் கிச்லு
   இ) முகமது அலி ஈ) ராஜ்குமார் சுக்லா
5. கூற்று : புலித்தேவர், ஹைதர் அலி மற்றும் பிரெஞ்சுகாரர்களின் உதவியை பெற முயன்றனர்.
   காரணம் : மராத்தியர்களோடு ஏற்கனவே தொடர் போர்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததால் ஹைதர் அலியால் புலித்தேவருக்கு உதவ முடியாமல் போனது.
   அ) கூற்று மற்றும் காரணம் ஆகியவை சரி எனினும் காரணம் கூற்றைச் சரியாக விளக்கவில்லை.
   ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறானவை.
   இ) கூற்று மற்றும் காரணம் ஆகியவை சரி. காரணம் கூற்றைச் சரியாகவே விளக்குகிறது.
   ஈ) கூற்று தவறானது காரணம் சரியானது.
6. பொருந்தாதைத் தேர்ந்தெடுக்கவும்.
   அ) கோதுமை ஆ) நெல்
   இ) தினை வகைகள் ஈ) காபி
7. தென்னிந்தியாவின் மிக உயரமான சிகரம் ________.
   அ) ஊட்டி ஆ) கொடைக்கானல் இ) ஆனைமுடி ஈ) ஜின்டா கடா
8. ஆந்த்ரசைட் நிலக்கரி ________ கார்பன் அளவைக் கொண்டுள்ளது.
   அ) 80%-90% ஆ) 70% க்கு மேல் இ) 60%-70% ஈ) 50% க்கும் குறைவு
9. இந்தியாவின் இறக்குமதி பொருள்
   அ) சிமெண்ட் ஆ) ஆபரணங்கள் இ) தேயிலை ஈ) பெட்ரோலியம்
10. தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும் டெல்டா ________.
    அ) காவிரி டெல்டா ஆ) மகாநதி டெல்டா
    இ) கோதாவரி டெல்டா ஈ) கிருஷ்ணா டெல்டா
11. நமது அடிப்படை உரிமைகளை ________ இடமிருந்து பெற்றோம்.
    அ) அமெரிக்க அரசியலமைப்பு ஆ) கனடா அரசியலமைப்பு
    இ) ரஷ்யா அரசியலமைப்பு ஈ) ஐரிஷ் அரசியலமைப்பு
12. எந்த இரு நாடுகளுக்கிடையே பஞ்சசீல ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது?
    அ) இந்தியா மற்றும் நேபாளம் ஆ) இந்தியா மற்றும் பாகிஸ்தான்
    இ) இந்தியா மற்றும் ஸ்ரீலங்கா ஈ) இந்தியா மற்றும் சீனா
13. உலகளாவிய பொது வழங்கல் முறையை ஏற்றுக் கொண்ட ஒரே மாநிலம் ________.
    அ) கேரளா ஆ) கர்நாடகா இ) தமிழ்நாடு ஈ) ஆந்திரபிரதேசம்
14. ஒரே ஒரு நாடு, ஒரே மாதிரியான வரி என்பதை எந்த வரி உறுதிப்படுத்துகிறது?
    அ) மதிப்புக் கூட்டு வரி ஆ) வருமான வரி
    இ) விற்பனை வரி ஈ) பண்டங்கள் மற்றும் பணிகள் வரி

பகுதி - II

**ஏதேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.**
**கட்டாய வினா எண் 28.** 10×2=20

15. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
16. முதல் உலகப் போருக்குப் பிந்தைய உலகத்தின் மூன்று முக்கிய சர்வாதிகாரிகள் யாவர்?

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



VNR10SS

17. பிரம்ம சமாஜத்தால் ஒழிக்கப்பட்ட சமூகத் தீமைகள் யாவை?
18. வாரிசு இழப்புக் கொள்கையின் அடிப்படையில் பிரிட்டிஷ் அரசில் இணைத்துக் கொள்ளப்பட்ட பகுதிகளைப் பட்டியலிடு.
19. கிழக்கு மற்றும் மேற்கில் அமையப் பெற்ற பாளையங்களைக் கண்டறிந்து எழுதுக.
20. காலநிலையை பாதிக்கும் காரணிகளை பட்டியலிடுக.
21. இந்தியாவில் காணப்படும் மண்வகைகளின் பெயர்களைப் பட்டியலிடுக.
22. நிலக்கரியின் வகைகளை அதன் கரிம அளவுகளுடன் குறிப்பிடுக.
23. 'தேரி' என்றால் என்ன?
24. தமிழ்நாட்டின் முக்கிய பல்நோக்குத் திட்டங்களின் பெயர்களை எழுதுக.
25. இந்தியாவின் செம்மொழிகள் எவை?
26. பஞ்சசீலக் கொள்கைகளில் ஏதேனும் நான்கினைப் பட்டியலிடுக.
27. தொழிற்துறைத் தொகுப்பு என்றால் என்ன?
28. இந்தியாவில் உள்ள இடப்பெயர்வு வேளாண்மையின் பல்வேறு பெயர்களை எழுதுக.

## பகுதி - III

**ஏதேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.** **10×5=50**

**கட்டாய வினா எண் 42.**

29. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| i) | கருப்பு தங்கம் | - | மறைமலை அடிகள் |
| ii) | சாங்போ | - | எண்ணெய் வித்துகள் |
| iii) | மஞ்சள் புரட்சி | - | மும்பை |
| iv) | தனித்தமிழ் இயக்கம் | - | பிரம்மபுத்திரா |
| v) | மேசகான் கப்பல் கட்டும் தளம் | - | நிலக்கரி |

30. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க.
31. ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றி விவரிக்கவும்.
32. சட்ட மறுப்பு இயக்கத்தில் தமிழ்நாடு வகித்த பங்கு விவரி.
33. இந்தியா தொழிலகங்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் பற்றி எழுதுக.
34. நகரமயமாக்கம் என்றால் என்ன? அதன் சிக்கல்கள் யாவை?
35. தமிழ்நாட்டின் பீடபூமி நிலத்தோற்றத்தின் தன்மையை விவரி.
36. வேறுபடுத்துக.
   அ) i) உலோகம் மற்றும் அலோக கனிமங்கள்
   ii) உணவுப் பயிர்கள் மற்றும் வாணிபப் பயிர்கள்
   ஆ) காரணம் கூறுக.
   வேளாண்மை இந்தியாவின் முதுகெலும்பு.
37. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.
38. வெளியுறவுக் கொள்கையை நிர்ணயிக்கும் அடிப்படைக் காரணிகளைப் பற்றி விவாதிக்கவும்.
39. உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக.
40. சில நேர்முக மற்றும் மறைமுக வரிகளை விளக்குக.
41. கொடுக்கப்பட்டுள்ள ஆண்டுகளுக்கு இடையே ஏதேனும் 5 உலக நிகழ்வுகளை காலக்கோட்டில் குறிக்க.
   1930 - 1950
42. கீழ்க்காணும் இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும்.
   1. ஜப்பான் 2. ஹவாய் தீவு 3. ஜெர்மனி 4. பிரிட்டன் 5. இத்தாலி

## பகுதி - IV

**கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளி:** **2×8=16**

43. அ) பெண்களின் மேம்பாட்டிற்கு 19ஆம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து ஒரு கட்டுரை வரைக. **(அல்லது)**
   ஆ) 1857 ஆம் ஆண்டின் பெரும் புரட்சிக்கான காரணங்களை குறித்து விரிவாக ஆராயவும்.
44. அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.
   எவரெஸ்ட் சிகரம், தார் பாலைவனம், மேற்கு தொடர்ச்சி மலை, பிரம்மபுத்திரா, பருத்தி விளையும் பகுதி, மன்னார் வளைகுடா, பன்னா உயிர்கோள பெட்டகம், மழைக் காடுகள். **(அல்லது)**
   ஆ) கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.
   காவேரி ஆறு, சென்னை, கன்னியாகுமரி, எண்ணூர் துறைமுகம், மேட்டூர் அணை, சோழ மண்டல கடற்கரை, வங்காள விரிகுடா, பறவைகள் சரணாலயம் ஒன்று.

----------

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com